செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100

**கல்வெட்டியல் & நாணயவியல் புலம்** நாள்:06.02.2024

**நடத்தும்**

# செவ்வியல் தமிழின் தொல்லெழுத்தியல் பயிலரங்கு

## (Workshop on Classical Tamil Paleography)

**பயிலரங்கம் - 20**

**(06.03.2024 -15.03.2024)**

## அறிவிப்பும் அழைப்பும்

உலகின் தொன்முது நாகரிகங்களில் ஒன்று என்னும் சிறப்புடையது சிந்துவெளி நாகரிகம். அது தமிழிய நாகரிகமே எனப் பின்லாந்து அறிஞர் அஸ்கோ பர்போலோ, ஐராவதம் மகாதேவன் போன்றோர் உலக அரங்கில் நிலை நாட்டியுள்ளனர். மூன்று தமிழ்ச்சங்க வரலாற்றின்படி முதல் தமிழ்ச்சங்க காலத்தில் ஓவிய எழுத்தும் இரண்டாம் தமிழ்ச்சங்க காலத்தில் சிந்துவெளி எழுத்தும் மூன்றாம் தமிழ்ச்சங்க காலத்தில் தமிழி எழுத்தும் அதிலிருந்து வட்டெழுத்தும் சோழர்காலத்தில் இன்றைய தமிழ் எழுத்துமாக வளர்ந்த தமிழ் எழுத்துகளின் வளர்ச்சி வரலாறு தமிழ் எழுத்துகளின் சங்கிலித் தொடர் போன்று தொடர்பறாத 5000 ஆண்டுகாலத் தமிழ் எழுத்தின் தொன்மையைப் புலப்படுத்துகிறது.

மிகத் தொன்மையான சிந்துவெளி எழுத்து தமிழ்நாட்டில் செம்பியன் கண்டியூர், கீழடி ஆகிய இடங்களில் கிடைத்துள்ளது. ஆந்திர, கேரள மாநிலங்களிலும் இலங்கை ஆகிய இடங்களிலும் சிந்துவெளி எழுத்தும் தமிழி எழுத்துகளும் கலந்த நிலையில் தொல்லியல் தரவுகள் கண்டறியப்பட்டுள்ளன. ஆகவே சிந்துவெளி எழுத்தும் தமிழி எழுத்தும் இந்தியாவின் ஒரே பொது எழுத்தாக (Pan Indian Script) நின்று நிலவின என்பது இதனால் நன்கு உறுதிப்படுகிறது.

இந்தியத் தொல்லியல் துறையினரால் கண்டறியப்பட்ட ஒரு இலட்சம் கல்வெட்டுத் தொல்லியல் பதிவுகளில் 60,000க்கும் மேற்பட்டவை தமிழகத்தில் கிடைத்தவை; அவற்றில் 95% விழுக்காடு தமிழில் எழுதப்பெற்றவை. இத்தகு பெருமை மிக்க தொல்லெழுத்தியல் சிறப்புடைய தமிழ் மொழியின் எழுத்தியல் வரலாறு பண்டைய காலந்தொட்டு இடைக்காலம் வரை கண்ணெழுத்து, கோலெழுத்து முறையில் எழுதப் பெற்றதைத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. நடுகற்கள், ஓலைச்சுவடி, தாட்சுவடி, தேக்குமரம், சுட்ட களிமண் பலகைகள், பானைகள், செப்புத்

தகடுகள், தோல் ஆவணங்கள், கல்வெட்டுகள் ஆகிய பல்வேறு எழுது பொருட்களில் காலந்தோறும் தமிழ் எழுத்துகள் எழுதப்பெற்று வந்துள்ளன.

மொழி அதனைப் பயன்கொள்ளும் மரபுதேர் மக்களால் வாழ்கிறது. அவ்வகையில் தமிழ் மொழியின் சீரான வளர்ச்சிக்கும் நீண்ட வாழ்விற்கும் அதன் தொன்மை வன்மை இனிமை நற்பேறு உணர்ந்து இக்கால ஆய்வு மாணவர்களும் பழந்தமிழ் எழுத்துக்களைக் கற்பது மிகத்தேவையாகிறது.

தமிழ் எழுத்தியல் வரலாற்றில் எழுத்து, அதன் ஆக்கம், காலந்தோறும் நிகழ்ந்த வரிவடிவ மாற்றம், எழுதும் வகைமை, எழுதுபொருட்களின் வகைப்பாடு, எழுத்தர்கள், சொல், சொல்லாக்கம், பொருண்மை, அதன் மாறுபாடுகள் ஆகிய கருத்தியல்களைப் பன்முக நோக்கில் ஆய்ந்து செவ்வியல் தமிழின் எழுத்து வரலாற்றோடு சொற்பொருண்மையின் விழுமியங்களை எடுத்துரைக்கும் நோக்கில் "செவ்வியல் தமிழின் தொல்லெழுத்தியல் பயிலரங்கு" என்னும் தலைப்பில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் கல்வெட்டியல் & நாணயவியல் புலம் ஒரு பயிலரங்கினை நடத்தவுள்ளது. தமிழ், வரலாறு, தொல்லியல் ஆகிய துறைகளைச் சார்ந்த கல்லூரி, பல்கலைக்கழக ஆய்வு மாணவர்கள் இப்பயிலரங்கில் பங்கேற்றுப் பயன்பெற அழைக்கப் பெறுகிறார்கள்.

இப்பயிலரங்கமானது செம்மொழித் தமிழின் தொல்லெழுத்தியல் வரலாறு, எழுத்தியல், வரிவடிவ மாற்றங்கள், காலந்தோறும் மாறிய எழுத்து சொல் பொருண்மைகளின் வளர்ச்சி நிலை, அதன் தனித்தன்மை ஆகியவற்றை ஆராய்ந்து வெளிப்படுத்துவதோடு தொல்தமிழ் எழுத்துகளின் பயன்பாடுகளை அறிவதற்கும் அவை குறித்தான பயிற்சியாக அத்துறை சார்ந்த அறிஞர்களைக் கொண்டு செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் 06.03.2024 முதல் 15.03.2024 ஆம் நாள் வரை பத்துநாள்கள் பயிலரங்கு நடைபெறவுள்ளது.

## பயிலரங்க விதிமுறைகளும் விவரங்களும் பின்வருமாறு:

1. பயிலரங்கில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை 30.
2. பயிரலரங்கு நடைபெறும் நாட்கள்: 06.03.2024 முதல் 15.03.2024 முடிய 10 நாட்கள்.
3. பயிலரங்கு நேரம்: காலை 10.00 – 01.00 & மாலை 02.00 – 05.00.

4. பங்கேற்பாளர்கள் தங்குமிடத்தைத் தாங்களே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.
5. பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படி, நாட்படி மத்திய அரசு விதிமுறைகளின்படி வழங்கப்படும்.
6. பங்கேற்பாளர்களுக்குத் தேநீரும், மதிய உணவும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.
7. பயிலரங்கில் கலந்துகொள்ள விரும்புவோர் இதன் கீழுள்ள விண்ணப்பத்தை நிறைவு செய்து **workshope@cict.in** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். இப்பயிலரங்கைப் பற்றிய கூடுதல் விவரங்களைத் தெரிந்துகொள்ள மேற்கண்ட மின்னஞ்சல் மூலமாகவே தொடர்பு கொள்ள வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் தொலைபேசி / அலைபேசி வழியாகத் தொடர்பு கொள்ளக்கூடாது.
8. பயிலரங்கக் கட்டணம் ஏதும் இல்லை.
9. விண்ணப்பம் உரிய வழியாக அனுப்பப்படுதல் வேண்டும்.
10. செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மின்னஞ்சல் / புலனம் வழியாக மட்டும் அழைப்பாணை அனுப்பி வைக்கப்படும்.
11. நிறைவு செய்யப்பெற்ற விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய இறுதி நாள் **25.02.2024.** கால தாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்கப்படமாட்டா.
12. இப்பயிலரங்கில் பங்கேற்கத் தெர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு **26.02.2024** அன்று மின்னஞ்சல் / புலனம் மூலமாகத் தகவல் தெரிவிக்கப்படும்.
13. இப்பயிலரங்கில் பங்கேற்போர் அனைத்து அமர்வுகளிலும் தொடர்ந்து கலந்துகொள்ள வேண்டும். அமர்வுக்குத் தாமதமாக வருவதைத் தவிர்த்தல் வேண்டும். தாமதம் மற்றும் இடைநிற்றல் இருப்பின் நாட்படியும் சான்றிதழும் வழங்கப்பட மாட்டா.
14. பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.

**இயக்குநர்**

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100

# செவ்வியல் தமிழின் தொல்லெழுத்தியல் பயிலரங்கு
## (Workshop on Classical Tamil Paleography)

**பயிலரங்கம் - 20**

(06.03.2024 –15.03.2024)

நிழற்படம்

## விண்ணப்பப் படிவம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | பெயர் | தமிழ் | | | | | | |
| | | ஆங்கிலம் | | | | | | |
| 2. | பிறந்த நாள் / வயது<br>Age / Date of Birth | | | | | | | |
| 3. | பாலினம் / Gender | | ஆண் | | பெண் | | திருநங்கை | |
| 4. | வகுப்பு / Class | | பொது/<br>General | | இ.பி.வ.<br>O.B.C | | பட்டியல் இனத்தவர்/ SC/ ST | |
| 5. | கல்வித் தகுதிகள் /<br>Educational Qualification | | | | | | | |
| 6. | முனைவர் பட்டப் படிப்பில் சேர்ந்த நாள்/ Ph.D., Date of joining/ year | | | | | | | |
| 7. | முனைவர் பட்ட ஆய்வுத் தலைப்பு / Ph.D. Research Topic | | | | | | | |
| 8. | பல்கலைக்கழகம்/ கல்லூரி/ நிறுவன முகவரி (தொலைபேசி / மின்னஞ்சல் / university/ college/ Address (Mobile / Email) | | | | | | | |
| 9. | இல்ல முகவரி & கைப்பேசி (Residential address & Mobile No) | | | | | | | |

<table>
<tr><td></td><td></td><td colspan="4"></td></tr>
<tr><td>10.</td><td>புலன எண் / whatsApp number</td><td colspan="4"></td></tr>
<tr><td rowspan="2">11.</td><td rowspan="2">செம்மொழி நிறுவனம் இக்கல்வியாண்டில் நடத்திய பயிலரங்கில் கலந்து கொண்டீர்களா? ஆம் எனில் விவரம் தருக. / Did you attend the workshop conducted by the CICT this academic year? If yes, please give details</td><td>ஆம்</td><td></td><td>இல்லை</td><td></td></tr>
<tr><td colspan="4"></td></tr>
</table>

**(கையொப்பம்)**

நாள்:

இடம்:

நெறியாளர் / துறைத் தலைவர்/

முதல்வர்/ பதிவாளர் உரிய முத்திரையுடன்